# <u>கல்வி உதவித்தொகை வழங்கும் விழா</u>

மதுரை, ஸ்ரீ ராஜம் GVR கல்வி மற்றும் சாரிடபிள் அறக்கட்டளையின் சார்பில் சௌராஷ்ட்ரா கல்லூரியில் பயிலும் பொருளாதாரத்தில் பின்தங்கிய மாணவ, மாணவியர்களுக்கு கல்வி உதவித்தொகை வழங்கும் விழா இன்று 07.09.2026 திங்கட்கிழமை காலை 11:30 மணியளவில், கல்லூரி வளாகத்தில் அமைந்துள்ள CSR ராமாச்சாரி நினைவு அரங்கில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

நிகழ்ச்சியின் தொடக்கமாக மாணவர்கள் கடவுள் வாழ்த்து பாடினர். கல்லூரி முதல்வர் கேப்டன் முனைவர் K. R. ஸ்ரீனிவாசன் அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். அதனைத் தொடர்ந்து கல்லூரி செயலாளரும் தாளாளருமான டாக்டர் D. R. குமரேஷ் அவர்கள் தலைமை உரை ஆற்றினார்.

இவ்விழாவில் சிறப்பு விருந்தினர்களாக திரு. G. ஜெயசீலன் (நிலகிழார்), திரு. K. K. S. V. T. சுப்பராஜ் (Ex சேர்மன், அருப்புக்கோட்டை) மற்றும் உயர்திரு. S. K. சுப்பாரெட்டியார் (செயலர், அம்பிகா வித்யாலயா, விளாத்திகுளம்) ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினர்.

தொடர்ந்து, ஓய்வுபெற்ற வேளாண்மைத்துறை இணை இயக்குநர் (Retd. Joint Director of Agriculture) திரு. D. சம்பத் குமார் மற்றும் திருமதி S. உமா சம்பத் குமார் ஆகியோர் கலந்து கொண்டு தகுதியுள்ள மாணவ, மாணவியர்களுக்கான கல்வி உதவித்தொகையின் வங்கி காசோலையை கல்லூரி செயலரிடம் வழங்கினர்.

இந்த உதவி தொகையின் மூலம் பயனடையும் மாணவர் எண்ணிக்கை: 67 (BCom, MCom, MCA, MBA, BSc Chemistry & MSc Maths). மொத்த உதவி தொகை: ரூ. 3,21,920/-

விழாவின் நிறைவாக, அறக்கட்டளைச் செயலாளர் முனைவர் J. துரைச்சாமி அவர்கள் நன்றியுரை ஆற்றினார். இவ்விழாவில் விழா விருந்தினர்களுடன் கல்லூரி கவுன்சில் உறுப்பினர் திரு. K A. வெங்கடேஷ்வரன், அறக்கட்டளையின் பொருளாளர் திருமதி. கவிதா துரைசாமி மற்றும் பேராசிரியர்கள், மாணவர்கள் திரளாகக் கலந்துகொண்டனர்.

**கல்விக்கு அளிக்கும் கை, எதிர்காலத்தை உருவாக்கும் கை.**